07.08.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.20/2019</u>

அ.சா.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குப்புசாமி | | |
| த/பெ | கோவிந்தன் | | |
| கிராமம் | எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 52/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல்ஜபாரை எனக்கு தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளில் மோகன் மற்றும் செல்வத்தை தெரியும். மேலும் ரவி, முஸ்தபா ஆகியோர்களையும் தெரியும். அப்துல்ஜபார் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் 6 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் முதலூர் கிராமத்தை சேர்ந்த பள்ளி கூட பிள்ளைகளுக்குள் தகராறு ஏற்பட்டது. அதில் எங்கள் ஊர் செல்வி மகன் சுபாஷ் என்பவருக்கும், கண்ணதாசன் மகனுக்கும் தகராறு ஏற்பட்டது. இந்த சண்டை சம்மந்தமாக 1, 2 எதிரிகளின் தங்கை செல்வி மகனுக்கு தகராறு என்பதால் இந்த 1,2,3 எதிரிகள் அங்கு போனார்கள். அப்போது முதலூருக்கு தற்செயலாக அப்துல்ஜபார் வந்துள்ளார். அப்போது மோகன், ரவி, செல்வம் மற்றும் அவருடன் சில நபர்கள் தகராறு செய்து கொண்டிருந்தபோது அவர்களை அப்துல்ஜபார் நியாயம் கேட்டு கொண்டிருந்தார். அப்போது கௌதம் என்பவரை அவர்கள் காரில் கடந்த முற்பட்டபோது அவர்களை அப்துல்ஜபார் மறித்துள்ளார். அப்போது அப்துல்ஜபாருக்கும், செல்வம், ரவி, மோகன் ஆகியோர்களுக்கும் வாய் வார்த்தை ஏற்பட்டதாக அப்துல்ஜபார் எங்கள் ஊருக்கு வந்து

எங்கள் நாட்டாமை மோம் (எ) முகமது மற்றொரு நாட்டாமை பாவாடை ஆகியோர்களிடம் மேற்படி விவரங்களை அப்துல்ஜபார் சொல்லிகொண்டிருந்தபோது நாங்கள் அனைவரும் அங்கு இருந்தோம். மோகனின் அப்பாவும் அங்கு இருந்தார். அவர் சொல்லி கொண்டிருந்தபோது அனைவரும் அங்கு வந்து விட்டார்கள். மறுநாள் நான் நாட்டாமை மற்றும் ஊர்காரர்கள் அனைவரும் அப்துல்ஜபாரின் வீட்டிற்கு சென்றோர். அங்கு நான், மோகன், ரவி, செல்வம் மற்றும் மோகனின் அப்பா ரங்கசாமி, கண்ணன், நாட்டாமை முகமது, நாட்டாமை பாவாடை இன்னும் சிலர் ஆகியோர் சென்று அப்துல்ஜபாரை சந்தித்தோம். அப்போது மோகனின் அப்பா என் மகன்கள் செய்தது தவறு என்று வணக்கம் சொன்னார். அவ்வாறே மோகனும், ரவியும் சொன்னார்கள். அதற்கு அப்துல்ஜபார் இதற்கு மேல் போய் அவர் அவர்கள் அவர்களுக்குரிய வேலையை பாருங்கள் என்றும், கண்ணதாசன் மகனிடம் தகராறுக்கு செல்லக்கூடாது என்றும் அறிவுறுத்தினார். அதன் பிறகு எதுவும் நடக்கவில்லை. இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

(சாட்சியை பகுதி **பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 2017ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் தேதிக்கு பிறகு 2,3 நாட்களுக்கு பிறகு மோகன், ரவி மற்றும் அவரது அப்பா ரங்கசாமி, நான் மற்றும் ஊர் பெரியவர்கள் எல்லாம் அப்துல்ஜபார் வீட்டிற்கு சென்றோம் என்றும், மோகன், ரவி ஆகியோர்களை அப்துல்ஜபாரிடம் மன்னிப்பு கேட்க வைத்தோம் என்றும், அப்போது அப்துல்ஜபார் காசு இருக்கிற தைரியத்தில் யாரையும் தரக்குறைவாக பேசி விடலாம் என்று நினைக்காதீர்கள் என்று சொன்னார் என்றும், இனிமேலாவது ஒழுங்கா இருங்க என்று சொல்லி அனுப்பி விட்டார் என்றும், அப்போது மோகனும் ரவியும் எங்கள் ஆட்களிடம் எங்களை மன்னிப்பு கேட்க வச்சிட்டீங்க அவரை நாங்கள் சும்மா விடமாட்டோம் என்று சொன்னதாக சொன்னேன் என்றால் சரியல்ல.

மேலும் மோகன், ரவி ஆகியோர்களின் லாரியில் மணல் ஏற்றி செல்லும்போது அப்துல்ஜபார் போலீசில் மாட்டி விட்டு அவர்களை ஜெயிலுக்கு அனுப்பி வைத்தார்

என்றும், அதனால் அவர்களுக்குள் பகை மூண்டது என்றும், அப்துல்ஜபாருக்கு வேறு யாரும் நேரடியாக பகையாளிகள் கிடையாது என்றும், கடந்த 27.06.2018ம் தேதி பகல் 2 மணிக்கு மேல் அவரை வீட்டில் வைத்து சிலர் வெட்டி கொலை செய்து விட்டார்கள் என்றும், மோகனும் ரவியும் அவர் வீட்டிற்கு வந்திருந்த ஒரு பையனும் சேர்ந்துதான் அப்துல்ஜபாரை கொலை செய்திருக்க வேண்டும் என்றும், சம்பவத்தன்று மோகன், ரவி, அந்த பையன், மோகன் வண்டியின் டிரைவர் எல்லோரும் வீரன் கோவிலுக்கு அருகில் நின்று பேசி கொண்டிருந்தார்கள் என்றும், அதன் பிறகு தான் கொலை நடைபெற்றது என்றும் காவல் துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டு கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி குறுக்கு விசாரணை**

எனக்கு நான் மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் அப்துல்ஜபார் சொல்லிதான் தெரியும். எனக்கு நேரடியாக இதுகுறித்து எதுவும் தெரியாது.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை 3ம் எதிரி தமதாக ஏற்றுக் கொண்டார்.

**1,4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1,4,5 எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளித்தும் அவர்கள் தரப்பில் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் அ.சா.9ன் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**

இல்லை